**R 5886 [Page 118]**

# சிறு நரிகள்
# The Little foxes

திறவு வசனம் : "திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள். நம்முடைய திராட்சத் தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே" - உன்னதப்பாட்டு 2:15

நரிகளை, குறிப்பாக சிறுநரிகளை பிடியுங்கள் என்று மேற்கண்ட வசனம் கூறுகிறது. நரி மிகவும் தந்திரமுள்ளதாக அறியப்பட்டாலும், இது எளிதில் பழகக்கூடிய, அமைதலுள்ள சிறு மிருகமாக உள்ளது. மூர்க்கத்தனமும் தீயகுணமும் வெளிப்படுமளவு தகுதிபெற்றதல்ல, மாறாக, அதிக தீங்கு ஏற்படுத்தக் காரணமாயுள்ளது. கேடுவிளைவிக்காதவாறு தோற்றமளிக்கும் இதன் முகப்பொலிவு, அதிக அபாயத்தை உண்டுபண்ணும். சிறு நரியாகிய இது, நாய் குடும்பத்தில் சிறியதான, எல்லாவற்றையும்போலவே அதன் குணாதிசயம் மிக அழிவை ஏற்படுத்தும். இதிலும் குறிப்பாக பிறருக்கு தீங்கு விளைவிப்பதில் நரி மிகவும் தந்திரமுள்ளதும் ஏமாற்றும் குணமும் கொண்டது. ஆனாலும் இதன் தீயநோக்கங்கள் குறித்த சந்தேகம் எழும்புவது குறைவாகவே இருக்கும். இது எளிமையின் தன்மையை விநோதமாய்க் கொண்டது. கபடற்றதாய் வெளித் தோற்றத்துக்கு காணப்படுவதால் பலரை வஞ்சிக்கும்.

திறவுவசனத்தில் நமது விழுந்துபோன சுபாவத்தின் ஒழுக்கக்கேடுகளுக்கு அடையாளக்காட்சியாக சாலமோன் ராஜா விளக்குவதாக தோன்றுகிறது. இந்த ஒழுக்கக்கேடுகள் உச்சகட்டத்தை குறிப்பதாகவோ, முழுமையை குறிப்பதாகவோ பேசவில்லை. ஆனால் சில ஒழுக்கக்கேடுகள் மிகவும் தீங்கு ஏற்படுத்துபவை. அவைகள் விசேஷித்த வஞ்சனைக்குள்ளாக்கி, நமது கவனத்தை தந்திரமாக திசைதிருப்பிவிடும். இதன்காரணமாக, அதிக அக்கறையும், நிலையான விழிப்புணர்வும் தேவை. இந்த வார்த்தைகள், மணவாட்டிக்கு மணவாளன் கூறும் மொழிநடையாகத் தோன்றுகிறது. சிறு நரிகள் என்று அவர் வலியுறுத்தி உரைத்திருப்பதன்மூலம், அவைகள் மாபெரும் அழிவை ஏற்படுத்தக்கூடியவை என்று அறிவுறுத்துகிறது. சிறுநரி என்ற இந்த பதத்தை, பாவத்துக்கு நாம் பொருத்திப் பார்க்கும்பொழுது, உண்மையில் சிறிய பாவங்கள், வெளிப்படையான பாவங்களைக் காட்டிலும் மிகவும் அபாயகரமானவை. ஏனெனில் மாபெரும் பாவங்களுக்கு எதிராக காத்துக்கொள்வதிலேயே கவனமாயிருந்து, சிறு பாவங்களை அலட்சியப்படுத்துவோம். ஒவ்வொருவரும் இயல்பாகவே சிங்கம், கரடி, பாம்புகளைக் குறித்து கவனமாய் இருப்போம். ஆனால் சிறு நரிகள் கவர்ந்திழுக்கும் தோற்றம் உடையவைகளாதலாலும், கபடற்ற குணமுடையவைகளாக தோன்றுவதாலும், அவைகளிடத்தில் கசப்பான அனுபவம் அடைந்திருந்தால் ஒழிய, அவைகளைக் குறித்த பயம் இருக்காது அல்லது ஓரளவே பயமிருக்கும். ஆனால் இந்த சிறு மிருகங்கள் பிறாண்டும் தன்மையுடையவையாயிருந்து, பொதுவாக அவைகளோடு இடைப்படுகிற எல்லாவற்றையும் அழித்துவிடும்.

**R5886 : page 119**

**திராட்சத்தோட்டங்களில் பூவும் பிஞ்சுமானவைகளை கவனமாய் பாதுகாத்தல் :-**

இந்த திராட்சத்தோட்டத்தை உதாரணமாகக் கொண்டு சாலமோன் ஞானி பேசுகையில், இந்த நரிகள் திராட்சை தோட்டங்கள்மேல் இயற்கையாக விசேஷவிருப்பம் கொண்டிருந்தபோதிலும், திராட்சை பரிசுத்தஆவியின் கனிகளைக் குறிக்கிறது. இந்த சிறுநரிகள் திராட்சச் செடிகளை தங்கள் கூர்மையான நகங்கள்கொண்டு பிறாண்டி, தங்கள் பற்களைக்கொண்டு அதன் வேர்கள் சிதைந்துபோகும்வரை தொடர்ந்து கடிப்பதுபோல், சிறு பாவங்கள் திராட்சச்செடியின் கிளைகளை பிறாண்டி, ஆவிக்குரிய திராட்சச்செடியின் வேர்களை தொடர்ந்து கடிக்கிறது. இவ்வாறு அதன் ஜீவனுக்கே ஆபத்தை வருவிக்கிறது. அவைகள் விலையேறப்பெற்ற திராட்சைகளை, அவை பிஞ்சும் பூவுமாயிருக்கும்போதே அழித்துவிடுகின்றன அல்லது விழுங்கிவிடுகின்றன. திராட்சச்செடிகள் உருவாகிறபோது மிக சிறியதாகவும், மென்மையாகவும், அதன் தண்டுகள் எளிதில் உடையக்கூடியதாகவும், எளிதில் கடித்துப்பிடுங்கி அழிக்கக்கூடியதாக இருக்கும். அவ்வாறே முதிர்ச்சியடையாத கிறிஸ்தவர்களது இருதயத்திலும், வாழ்க்கையிலும் ஆவிக்குரிய கனிகள் எளிதில் பாதிக்கப்படவோ, அழிந்து நாசமடையவோ நேரிடும். இதற்கு அவர்களது அக்கறையின்மை மற்றும் விழிப்பின்மை அல்லது சகோதரர்களுடைய நடக்கை காரணமாக இருக்கக்கூடும். பரலோக வழியில் நீண்டகாலமாக நடந்துவருகிற சகோதரர்கள், சற்றே ஆவிக்குரிய ஓட்டத்தை துவக்கியிருக்கிற சகோதரர்கள் முன்பாகவும், முதிர்ச்சி யடையாதோர் முன்பாகவும், மந்தையின் ஆட்டுக்குட்டிகள் முன்பாகவும், தங்கள் வார்த்தைகள் மற்றும் நடக்கைகளில் எவ்வளவு கவனமாக பாதுகாக்கவேண்டும்! விசுவாச ஓட்டத்தை தற்போது துவங்கியிருப்பவர்கள் முன்பாக, சகோதரர்கள் அன்பற்ற முறையில் குறைகூறுவது அல்லது விமர்சிப்பது, தீங்கை ஏற்படுத்துவதோடு, அன்பில் குறைவுபட்டிருப்பதையும், கிறிஸ்தவ முதிர்ச்சி யின்மையையும் வெளிப்படுத்துகிறது.

ஒவ்வொரு தேவபுத்திரனும் சிறுசிறுகாரியங்களில் தங்களை பாதுகாத்து நடக்கவேண்டும். காணப்படுகிற பெரிய காரியங்களைப் பார்க்கிலும், கேலிப்பேச்சு போன்றவை சிலசமயங்களில் சபையில் அதிக தீங்கை ஏற்படுத்தும். சிறிது சிறிதாக உட்புகும் காரியங்கள், அடிக்கடி மனக்காயத்தை நிரந்தரமாய் ஏற்படுத்தும். பரிசுத்த காரியங்களைக் குறித்த வேடிக்கையான பேச்சு, பரிசுத்த வேத எழுத்துக்களை கேலிப்பொருளாக்கும். அதேபோல் சுயநலமாய் செய்யப்படும் சிறுசெயலும் பாதிப்பை ஏற்படுத்தும். இப்படிப்பட்ட காரியங்கள் கர்த்தரது திராட்சைத் தோட்டங்களின் கிளைகளுக்கு அதிக அழிவை ஏற்படுத்து வதோடு, விலையேறப்பெற்ற கனிகளையும் அழித்துவிடும் என்பதை ஒவ்வொருவரும் கவனித்துப் பார்க்கவேண்டும்.

ஆகவே, அன்பு சகோதரரே, இப்படிப்பட்ட சிறுநரிகளை, அதிகதிகமாய் கூர்ந்து கவனித்து, பிடிக்க போராடுவோமாக. நாம் ஒவ்வொருவரும் நம் சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் நம் சொந்த கனிகளை காத்துக்கொள்வதிலும், பிறரது கனிகளைகாத்துக் கொள்வதிலும் விழித்திருந்து ஜெபித்திருப்போம். நம் கனிகளுக்கும் பிறரது கனிகளுக்கும் தடை ஏற்படாதபடியும், கனிகள் குறையாதபடியும் விழிப்பாய் ஜெபித்து காத்துக்கொள்வோமாக.

நன்மை அல்லது தீமையான காரியங்களில் நமது ஆதிக்கம் எவ்வளவு வல்லமைமிக்கது என்று புரிந்து கொள்வது நமக்கு கடினமாயிருக்கிறது. கவனமாக கூர்ந்து ஆராயாவிடில் அது அற்பமான விஷயமாக தோன்றும். ஆம்! இந்த சிறு நரிகள்! கவனக்குறைவான வார்த்தைகள், அரிதாகப் பேசப்பட்ட ஒரு சிந்தனை, அல்லது பொறுமை யில்லாத ஒரு நொடியில் வெளிப்படும் சிந்தை, அதிருப்தியான சிறு சிறு முனகல்கள், ஏளனம் நிறைந்த ஒரு வார்த்தை அல்லது சிரிப்பு அல்லது பார்வை அல்லது வெறுப்போடு தோள்அசைத்தல், இப்படிப்பட்ட செயல்பாடுகள் நம் அனுதின வாழ்வில், நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு எதிராக கணக்கிடப்படுவதையும், மற்றவர்களுடைய வளர்ச்சிக்கு வித்திடுகிறது என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும். நாம் நமது குணாதிசயத்தையும், சகோதரர்களது குணாதிசயங் களையும் ஊக்கத்தோடு கட்டிஎழுப்ப தேடவேண்டும். இந்த எல்லாக் காரியங்களையும் நம் கர்த்தர் கண்காணித்து குறித்துக்கொள்கிறார். “கொஞ்சத்தில் உண்மையுள்ளவன், அதிகத்திலும் உண்மையுள்ளவனாய் இருப்பான்.”

-----------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com